திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. அசோகன் அவர்களும், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. ம. அப்துல் லத்தீப், திரு. ஐ. கணேசன் ஆகியோரும் கொடுத்துள்ளார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளப்படுவதற்கு அனுமதி அளிக்கிறேன். இதன்மீது சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன். திரு. அசோகன்.

முற்பகல் 11–00

3. தகவல் கோரல்

உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

திரு. மீ.அ. வைதியலிங்கம்: தலைவர் அவர்களே, என்னுடைய கவன ஈர்ப்பு அறிவிப்பு என்ன ஆனது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாம்பரம் குடிநீர்பற்றி நாளை மறுநாள் எடுத்துக்கொள்வதாக அமைச்சர் சொல்லியிருக்கிறார்.

திரு. ஜி. பழனிசாமி: நான் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவருடைய தொகுதி. கொடுத்து இருக்கிற நேரம் என்பது ஒன்று.

திரு. ஜி. பழனிசாமி: முதலிலே அந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து நான்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதில் இருக்கிற அவசியத்தை உணர்ந்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம்தான். ஒத்திவைப்புத் தீர்மானம் இல்லை.

திரு. ஜி. பழனிசாமி: ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தனியாக எடுத்துக் கொள்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாவற்றையும் சேர்த்து சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.